## ¨இந்த சிக்கலான சமயங்களில் தேவனில் நம்பிக்காயாயிருத்தல்¨

**தலைமை அப்போஸ்தலர் ஜோன் லூக் ஷ்னைடருடன் கொரேனா நெருக்கடி ருறித்த தொடர்புபடுத்தல் பற்றிய ஒரு நேர்காணல்**

*சூரிச். அண்மை நாட்களில் கொரோனா தொற்று பற்றிய விஷயமே ஒவ்வொருவர் மனதிலும் இருந்து வருகிறது. தினமும் செய்தி அறிக்கைகள் நமக்கு துர்ச்செய்திகளையே கொண்டுவருகின்றன. நியூ அப்போஸ்தலிக் சர்ச்-இன் தலைமை அப்போஸ்தலர் இதைப் பற்றி என்ன சொல்ல வேண்டியுள்ளது? அவர், தேவனில் நம்பிக்கைக் கொண்டிருக்கும்படியான ஒரு வேண்டுதலுடன் தம் சகோதர சகோதரிகளிடமாய் திரும்புகிறார்,*

**தலைமை அப்போஸ்தலர் ஷ்னைடர், கொரோனாவினாலுண்டாகும் ஆபத்து உலகமெங்குமுள்ள ஜனங்கள் தங்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டிருக்கும்படியான விளைவை உண்டுபண்ணுகிறது. இது வரைக்கும் எல்லாக் கண்டங்களிலுமுள்ள திரளான ஜனங்கள் பாதிக்கப்பட்டு அல்லது மரணமடைந்தும் உள்ளனர். ஆறுதல் சொல்லக்கூடிய செய்தி ஒன்று உங்களிடம் உண்டா?**

நான் இந்த நெருக்கடியை வினையமாக எடுத்துக்கொள்கிறேன். உலக மதிப்பீடுகளின்படி கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் ஏறக்குறைய 275,000 பேர் (21மார்ச் 2020 இன்படி தற்போதைக்கான எண்ணிக்கைக்காக http://coronavirus.jhu.edu/map.html காண்க). துர்அதிஷ்டவசமாக மேலும் அநேகமானோர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். நாம் பாதிக்கப்பட்டவர்களின் துன்பத்தில் பங்குபெற்று அவர்களுக்காக ஜெபிக்கிறோம். முன்வரிசையில் நின்று அர்பணிப்புடன் உதவி புரிகிற நபர்களுக்கு நன்றி செலுத்துகிளோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் மற்றவர்களுக்கு உதவ எத்தனைப்பேர் தயாராக இருக்கிறார்கள் என்பதைக் காண்பது எத்தனை அருமையானது,

இத்தகைய சூழ்நிலையில், பிரத்தியோகமாக கடந்த காலத்தில் ஏற்கனவே பெரும் துன்பங்களை அனுபவித்த நம் அங்கத்தவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள முடியுமாயுள்ளது.

- எனது ஆரம்பதிட்டங்களின்படி, அடுத்த வாரம் நான் இந்தோனேஷியாவில் இருக்க வேண்டும் , அந்த நாட்டில் இரண்டு பூமியதிர்ச்சிகள் காரணமாக 2500 பேர் மரித்தார்கள். இத்தீவுகளிலுள்ள ஜனங்கள் இந்த அபாயத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வழியின்றியிருந்தனர்.

- நான் சற்று அதிருப்தியடைகிறேன். காரணம் பிரான்சில் ஊரடங்கு சட்டமாகையால் நான் வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டியிருந்தது. ஆபிரிக்காவில் ஆயிரக்கணக்கான ஜனங்கள், அவர்களுள் அநேகர் நம் அங்கத்தவர்களும்கூட அதிகம் அல்லது குறைந்த பாதுகாப்புள்ள அகதிமுகாம்களில் வாழ்கின்றனர்.

- கொரோனவினால் உண்டாகும் பாதிப்பினால் பல இடங்களில் துர்அதிஷ்டவசமாக வியத்தகு பொருளாதார விளைவு ஏற்படுகிறது. இது எப்போதும் போலவே-முதலாவதும் முதன்மையானதையும் உடையவர்களைப் பாதிக்கின்றது; இது என்னை மிகவும் கவலைக்குள்ளாக்குகிறது. இங்கு நான் உதவி செய்ய முடியாது. ஆனாலும் 2017 இல் காசாய் பிரதேசத்திலுள்ள 75,000 அங்கத்தவர்கள் (கொங்கோகுடியரசு) ஒரே வாரத்தில் முற்றிலும் அனைத்தையும் இழந்தவர்கள் வேறு நாட்டிற்கோ காடுகளுக்கோ ஓடிப்போக நேரிட்டது,

- ஆம் நாம் இனியும் டிவைன் சர்வீஸ்களுக்கு ஒன்று கூடிவர முடியாதென்பது உண்மை. இது இங்கும் கூட மனவருத்தத்தைக் கொடுக்கிறது. சில வாரங்களுக்கு முன்பு, நான் மேற்கு ஆபிரிக்காவிலிருந்ததை திரும்பவும் சிந்தித்துப்பார்க்கிறேன். அங்குள்ள கிறிஸ்தவர்கள் ஒரு டிவைன் சர்வீஸ்-க்குப் போகிறதனால் கொலைசெய்யப்படுகிறார்கள்.

- நான் நம் சகோதரரைக் குறித்து நினைவுக்கூறுகிறேன். ரஷ்யாவிலும் பசுபிக்குக்கு தொலைவிலுமுள்ள இவர்கள், ஒரு சில வாரங்களுக்கு ஒரு தடவையோ ஒருவேளை ஒரு சில மாதத்திற்கு ஒரு தடவை மாத்திரம் பரிசுத்த நற்கருணையுடனான சர்வீஸ்-இல் கலந்துகொள்ளும் வாய்ப்பையுடையவர்களாய் இருக்கிறார்கள்.

நான் கொரோனா நெருக்கடியைக் குறித்து மதிப்பிடுவதற்காக இதை சொல்லவில்லை. மாறாக; இந்த நாடுகளில் இப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்கின்ற நம் சகோதர சகோதரிகளிடமிருந்து கற்றுக்கொள்ளும்படி நம் அனைவருக்கும் வேண்டுகோள்விடுக்க வரும்புகிறேன். இந்த எல்லா சவால்கள் இருப்பினும் ஏன் அவர்கள் அத்தகைய பெலத்தையுடையவர்களாய் இருந்து வருகிறார்கள்? ஏனெனில், அவர்கள் கிறிஸ்துவில் ஆழமாக வேரூன்டப்பட்டுள்ளார்கள். கர்த்தருக்கான அவர்களின் அன்பு – அதுவே அவர்களின் இரகசியம்! இன்று நாம்

அனுபவிக்கும் கஷ்ட்டமான, சில வாரங்களுக்குமுன்பு நம்மை இன்னும் ஆக்கிரமிக்கும் அல்லது நம்மேல் பாரத்தை சுமத்தும் பல்வேறு விஷயங்கள் திடீரென முற்றிலும் முக்கியமற்றதாகிறது. இப்பொழுது நம் மனங்களில் மிகவும் முக்கியமாக இருக்க வேண்டியது கிறிஸ்துவுடனான உறவாகும்!

தேவனிலுள்ள நமது அன்பில் உறுதியாய் நிலைத்திருப்போம். கர்த்தர் எப்போதும் நம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு உதவிசெய்ய ஒரு விசேஷித்த வழியைக் கண்டுபிடிப்பார்: தேவனின் வாக்குத்தத்தம் நிலைத்திருக்கிறது: சகலமும், கொரோனா வைரசினாலுண்டாகும் ஆபத்தும்கூட – தேவனில் அன்பு கூருகிறவர்களுக்கு நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது [ரோமர் 8: 28].

**தற்சமயம் நீங்களாகவே உங்களை பிரயாணம்பண்ண அனுமதிப்பதில்லை. அடுத்துவரும் இரண்டு வாரங்கள் உங்களுக்கு எப்படியாக இருக்கும்?**

அதிகாரங்களால் நம்மீது சுமத்தப்பட்ட வரையறைகள் காரணமாக, 10 ஏப்ரல் வரை எல்லாதிட்டங்களையும் நான் ரத்துசெய்ய வேண்டியுள்ளது. தற்சமயம், அதன்பிறகு சூழ்நிலை எவ்வாறிருக்கும் என்பது எவருக்கும் தெரியாது, மற்ற எல்லாரையும் போலவே நான் சூழ்நிலைக்கு ஏற்றவாறு சரிபடுத்திக்கொள்ளவேண்டும். ஆனாலும் நான் அதைரியப்படவோ நம்பிக்கை இழக்கவோ இல்லை: தேவன் நம்மோடிருக்கிறார் என்றும் அவர் தமது பிள்ளைகளை முக்கியமாக, இக்கட்டான நிலைமைகளில் கைவிடமாட்டார் என்றும் நான் அறிவேன். அப்படியே: விஷயங்கள் தொடரும்.

**திருச்சபை வாழ்க்கை பிரத்தியேகமாக ஒரு ஸ்தம்பிதமடைந்த நிலைக்கு ஆகியுள்ளது. அரிதாகவே டிவேன் சர்வீஸ்-கள் நடத்தக்கூடியதாயிருக்கிறது. உங்கள் சகோதர சகோதரிகளுக்கு நீங்கள் என்ன புத்திமதி கூறுகிறீர்கள்?**

வீட்டிலே தங்கியிருந்து, நிலைமைக்கூடாக கூடுமானவரை பயன்பெற வேண்டும். எங்கெல்லாம் கூடுமோ அங்கெல்லாம் ஒளிபரப்பு பரிமாற்றம் மூலம் நமது அங்கத்தவர்களுக்கான வீட்டிலிருந்தே டிவைன் சர்வீஸ்-ஐப் பெற மாவட்ட அப்போஸ்தலர்கள் ஒழுங்குசெய்ய சமாளிக்கிறார்கள். ஏன் தேவன் இப்படியான ஒரு நிலைமையை அனுமதித்தாரென நாம் அறியோம். ஆனால் ஆவிக்குரிய முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ள இக்காலம் என்றுமில்லாதவாறு, டிவைன் சர்வீஸ்களும், ஊழியர்களும் மற்றும் பரிசுத்த நற்கருணை ஆசரிப்பும் எத்தனை முக்கியமானதென்பதை அறிய நமக்கு உதவும் என நான் நிச்சயிக்கிறேன்.

**ஒளிபரப்பு பறிமாற்றம் வழியான இந்த டிவைன் சர்வீஸ்களில் பரிசுத்த நற்கருணை ஆசரிப்பு இராது.**

அது சரியானதே. இந்த டிவைன் சர்வீஸ்-கள் வழமையான ஒழுங்குமுறையுடன் பரிசுத்த நற்கருணை ஆசரிப்பு இன்றி நடத்தப்படும். ஆயிரக்கணக்கான ஏனையவர்கள் வீட்டிலுருந்து பரிசுத்த நற்கருணை ஆசரிப்பு இன்றி டிவைன் சர்வீஸ்-இல் கலந்துகொள்ளும் அதே வேளை, நம் அங்கத்தவர்களில் ஒரு சிலபேர் மாத்திரம் பரிசுத்த நற்கருணையை ஆசரிக்கக்கூடுமாயிருப்பது பொருத்தமற்றதாயிருக்கும்.

**நமது வழக்கத்தின் படி செய்கிறது போல் மரித்தோருக்கான டிவைன் சர்வீஸ்களில் வாஞ்சையுள்ள ஆத்துமாக்கள் சார்பாக இரண்டு  பிரதிநிதிகள் சாக்ரமந்து ஆசரிக்கப்படக்கூடுமா?**

கடந்த சில நாட்களில் பல எண்ணிக்கையான சகோதர சகோதரிகள், பெறுகிறவர்களின் ஸ்தானத்திலுள்ள அங்கத்தவர்கள் சார்பாக அப்பம் புசிக்கக்கூடிய இரண்டு ஊழியர்களுக்கு நடத்துபவர் பரிசுத்த நற்கருணை வழங்குவதற்கான ஆலோசனையை முன்வைத்தார்கள். கவனமாக பரிசீலித்த பின்னர் மற்றும் ஐரோப்பாவிலுள்ள மாவட்ட அப்போஸ்தலர்களுடன் கலந்தாலோசித்தலில் – இவர்கள் முதலில் பாதிக்கப்பட்டவர்கள் – இந்த ஆலோசனையைப் பின்பற்ற வேண்டாம் என முடிவுசெய்தேன்.

© New Apostolic Church International

**ஏன் பின்பற்றக்கூடாது?**

பரிசுத்த நற்கருணையானது நமது [நி. அ. ச கெடிகிஸம் 8.2.20 இல்] விபரிக்கப்பட்டுள்ள இரட்சண்யத்துக்கான பலனான சாக்ரமந்து ஆகும். நாம் இலகுவில் நமது தற்கால தேவைகளுக்கு ஏற்றவாறு நடைமுறைரீதியிலான வழங்குதலுக்குரிய மாதிரியை மாற்றமுடியாது – அது அப்போஸ்தல ஊழியத்துக்குரிய பொறுப்பாகும். முக்கியமாக பரிசுத்த நற்கருணையின் புனிதத்தன்மையை பாதுகாக்க வேண்டியது தலைமை அப்போஸ்தலரின் பொறுப்பாகும்! மரித்தோர் சம்பந்தப்பட்ட பரிசுத்த நற்கருணையாகையால், இந்த இரட்சிப்பின் நடவடிக்கை மரித்தோருக்கு வழங்கப்பட முடியுமெனவும் கட்டாயமானதென்றும் நம்புகிறோம். அப்படிச் செய்வதற்கான ஒரே வழி மறுமையிலுள்ள ஆத்துமாக்களை பிரதிநிதிபடுத்துவதற்கு உயிருள்ளோரை ஈடுபடுத்துவதுதான். ஆயினும் இந்த அணுகுதல் உயிருள்ளவர்களுக்குப் பொருத்தமாயிராது. நாம் கிறிஸ்துவின் சரீரத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தைப் பானபண்ணுவது. ஒரு ஆசாரிய ஊழியரால் பிரதிஷ்டைப் பண்ணப்பட்டு வழங்குவதை தகுதியுடன் பெறுதல் வேண்டும் [நி அ ச கோட்பாட்டின் 7வது சரத்து ஒப்பிடுக].

**மேலும் பிரதிஷ்டைபண்ணப்பட்ட அப்பங்களை நேரத்துக்குக் கிடைக்கச் செய்வதற்கு வேறு வழி இல்லை?**

அநேக ஆண்டுகளாக நமது திருச்சபையிருந்துவந்த இந்த நடைமுறையை நாம் நன்கு அறிந்துள்ளோம். விசுவாசிகள் ஐக்கியத்தில், ஒரு ஊழியர் அங்கு இல்லாமல் அப்பம் பெற்று பரிசுத்த நற்கருணையை ஆசரிப்பார்கள். உதாரணமாக சபை பராமரிப்புக் கடிதங்களைப் பெறுவோருக்காக இந்த அணுகுதலே பயன்படுத்தப்படுகிறது. எவ்வாறாயினும், இந்த நடைமுறை ஒரு விதிவிலக்காக இருத்தல் வேண்டும். அதை எந்த வகையிலும் மாற்ற முடியாது. ஒரு முழுமையாக செல்லத்தக்க முறையில், திரையில் வீட்டிலிருக்கும் ஒரு விசுவாசி, சார்பாக அப்பம் புசிக்கும் ஒரு நபரை காணல், இரட்சிப்புக்கான பலனையுடையவராய் இருக்கிறதில்லை. அது ஒரு உண்மையான பரிசுத்த நற்கருணையாக பயனளியாது.

**ஆகவே அங்கத்தவர்களுக்கு எதனை சிபாரிசுசெய்வீர்கள்?**

இந்த தொற்றுநோய் பரவுதலால் உண்டாகும் நெருக்கடி முடியும்வரை அநேகமான அங்கத்தவர்கள் பரிசுத்த நற்கருணை பெறுதல் இல்லாமல் இருக்க வேண்டியேற்படும் என்பதை நான் அறிவேன். அவர்களுடைய துன்பத்தில் நான் பங்கடைகிறேன். கடைசியாக ஊரடங்கு சட்டத்தின் விளைவாக, மேலும் அறிவித்தல்கள் கிடைக்கும்வரை, அவ்வாறே வீட்டிலிருப்பேன். எவ்வாறாயினும், இந்த துயரமான காலங்களில் தேவனில் நம்பிக்கைக் கொண்டிருப்போம் – நம் நம்பிக்கையை தேவனில் வைப்போம் – தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு அவர் அவர்களின் இரட்சிப்புக்கு அத்தியாவசியமானதை எவ்வாறு அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதை அவர் அறிவார்!

**தலைமை அப்போஸ்தலர் ஷ்னைடர், இந்த நேர்காணலுக்காக மிக்க நன்றி**

© New Apostolic Church International